1974 மார்ச் 27]

இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. உழவர் செயல்முறை, அதாவது Functional literacy என்ற அளவிற்கு, உழவர்களுக்கு எந்தெந்தச் சொற்கள் பயன்படுமோ, எந்தெந்தச் சொற்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுமோ, விதை, உரம், இன்னும் வேறு பல வகைகளில் எந்தெந்தச் சொற்களை உழவர்கள் அதிகமாகப் பயன்படுத்துகிறார்களோ அந்த அறிவை ஓராண்டு காலத்தில் வளர்க்கின்ற முறையில்தான் இந்த வகுப்புகள் துவங்கப் பட்டிருக்கின்றன. இதுவரையில் கிட்டத்தட்ட பொள்ளாச்சி கல்வி மாவட்டம், தஞ்சை கல்வி மாவட்டம், திருவண்ணாமலை, தூத்துக்குடி ஆகிய கல்வி மாவட்டங்களில் வைக்கப் பட்டிருந்தது. இந்த ஆண்டு மதுரை, புதுக்கோட்டை கல்வி மாவட்டங்களில் வைப்பதற்குத் திட்டம் இருந்து வருகிறது.

உதகமண்டலம் ஏரி.

*629 வினா—**திரு. கு. அ. பொம்மன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் ஏரியின் பராமரிப்புப் பணி மீனளத் துறையிலிருந்து சுற்றுலாத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) படகோட்டல் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு சிறப்பிடம் அளித்து, உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் உதகமண்டலம் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகிறது. எனவே, படகு நிலையச் சிற்றுண்டிச் சாலை உட்பட படகு நிலையத் தொகுதி முழுவதும் மீனளத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படுவதைக் காட்டிலும் பயணி களுக்கு மிகுந்த வசதிகள் அளித்து, வணிக அடிப்படையில் நடத்தப்பட வேண்டும். இயற்கைச் சூழலைப் பாதுகாக்க ஏரியில் தூர் வாருதல், ஏரிக்கு எழில் கூட்டுதல் ஆகியவற்றிற்காக அரசும் ரூபாய் ஐந்து லட்சம் செலவு செய்துள்ளது. உதகமண்டலம் ஏரியை மேலும் மேம்படுத்துவதற்கான திட்டங்கள் அரசின் ஆய்வில் உள்ளன. எனவே, ஏரியினை சுற்றுலாத் துறையின் பொறுப்பின் கீழ்க் கொண்டு வருவதும், மீனளம் குறித்த தொழில்

நுட்பக் கூறுகளை மீனளத் துறையிடமே தொடர்ந்து விட்டு வைப்பதும் விரும்பத்தக்கது எனக் கருதப்பட்டு, அந்த வகையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது திட்டம் இருப்பதாகக் கூறினார்கள். அதை உடனடியாக, ஏனென்றால் கோடை காலத்தில் வெளியூர்ப் பிரயாணிகள் அங்கே அதிகமாக வருவதால், அதன் மூலம் அந்நியச் செலாவணியும் அதிகமாகக் கிடைப்பதால், உடனடியாக ஏற்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதற்கென்று விரிவுபடுத்த, அழகுபடுத்த என்று திட்டம் வகுக்கப்பட்டு ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

M/s. Prynne Abbott and Davies, leading Architects

அது சம்பந்தமாக ரிப்போர்ட் தந்திருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாயூரத்தில் அரிசன நலப் பணிகள்.

* 630 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972–73 இல் மாயூரம் தொகுதியில் அரிசன நலத் துறை மூலமாக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ரூ. 3,83,482.

(இ) 1972–73 இல் மாயூரம் தொகுதியில் அரிசன நலத் துறை மூலமாகச் செலவழிக்கப்பட்ட தொகைபற்றிய விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

@ 654 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது